
Kavignan

# கவிஞன்

முற்றுமுழுதான மாதாந்தக் கவிதைச் சஞ்சிகை

**இனி நீங்களும் விளையாடலாம் மொழியோடு**



**இதழ்-009 கார்த்திகைத் திங்கள் 2010**

அறிமுக விலை ரூபா-20.00

# Kavignan கவி ஞன்

கவிஞன் வாசகர்களுக்கு வணக்கம்,

**கடந்த 22.10.2010 அன்று மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய மண்டபத்தில் நிகழ்ந்த கவிஞன் கவிதைப் பட்டறை -01 நிகழ்வுகளுடன்...**

*அனுசரணை வழங்கியிருந்த கதிரவன் சஞ்சிகைக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி*



-நன்றி-


"கவிஞன்"
கூட்டுறவுக்கடை வீதி,
புதுக்குடியிருப்பு-5(கி.மா),
மட்டக்களப்பு,
இலங்கை.

'KAVIGNAN"
Co-op Road,
Puthukkudiyiruppu - 5 (E.P),
Batticaloa,
Sri Lanka.

மின்னஞ்சல்: kavignan@live.com


**வருடச் சந்தா ரூபா.300.00**

சந்தா தொகையினைக் காசுக்கட்டளை மூலமாக அனுப்பமுடியும்.

அனுப்பவேண்டிய தபாலகம் : புதுக்குடியிருப்பு

முகவரி : ச.மதன், கூட்டுறவுக் கடைவீதி, புதுக்குடியிருப்பு(கி.மா),மட்டக்களப்பு.

அன்புடன்
ஆசிரியர்

Kavignan
# கவி ஞன்

தோற்றம்: 27. பங்குனி. 2010

009

21 கார்த்திகை 2010

ஆசிரியர் :சதாசிவம் மதன்
தொ.பே :0094 773620328
முகவரி :கூட்டுறவுக்கடை வீதி,
புதுக்குடியிருப்பு–5(கீ.மா),
மட்டக்களப்பு,
இலங்கை.
மின்னஞ்சல்: kavignan@live.com

## உள்ளே....

அறிமுகப் புதுமுகம்.
இம்மாதப் பிரபலம்.
மணற்றொட்டி.
கவிதைத்துளிகள்.
கவிதைச் சமர்.
மாதம் ஒரு கீதம்
மாணவர் மனதில்
மௌனமாய் பேசுகிறோம்
மானிட சமூகத்திலே
சீ...தனம் தேவையில்லை
அட்டைப்படக் கவிதை.
அகத்தில் அமர்ந்தவை .
மேசைக்கிறுக்கல் .
நிறைமகள்.
வாசகரிடமிருந்து கவிஞனுக்கு.

## சிந்தனைக்கு...

உவமை "வேல்போன்ற விழி" என்று வெளிப்படையாய் அணி செய்யும் தன்மை வாய்ந்தது. உருவகம் அதற்கடுத்த படி நிலையாக "விழிவேல்" என்று இரண்டும் ஒன்றானாற் போன்ற ஒரு தோற்றத்தைப் படைத்தாலும் "ஆகிய " உருபு மறைந்திருப்பதை உருவகப் படுத்தும் போதே புலப்படுத்திக் கொண்டு நிற்கும். படிமம், "விழி பாய்ந்தது" என்று முதிர்ந்த உருவகத்திற்கு மேல் உயர்ந்து உரைக்கப்படும் பொருளின் காட்சியை எழுப்பிக் காட்டும். குறியீடு "வேல் அழுதது" என்று படிமத்தை விட முதிர்ச்சி பெற்று வேல் என்பது இயல்பான தன் பொருளை இழந்து "கண்" என்ற வேறொரு மறை பொருளை உணர்த்திச் செறிவானதொரு கவிதைக் கூறாக அமைந்து விடுகிறது.

(முனைவர்.இரா.சம்பத் எழுதிய "புதுக் கவிதையில் இலக்கிய இயக்கம் நூலிலிருந்து..)

# அறிமுகப் புதுமுகம்



**முழுப்பெயர்** : செல்வி.புஸ்பராசா பேருகா.

**முகவரி** : விஸ்ணு கோயில் வீதி,
நற்பட்டிமுனை,
கல்முனை.

**பிறந்த திகதி:** 16.07.2010

**கல்வி கற்கும் பாடசாலை:**

கமு/சிவசக்தி வித்தியாலயம். நற்பட்டிமுனை

**தரம்: 5**

**ஆசைப்படுவது:**
சிறந்த கல்விமானாக வருவதற்கு

**பொழுது போக்குகள்:**

விளையாட்டு
கணனி
முத்திரை சேகரித்தல்

# எனது சிறிய நாடு

இந்தியாவின் கிழக்கில்
இனிமையான தீவு
இன்பம் தரும் இனிய பல
இனித்திடும் காட்சிகள்

அசைந்தோடும் அருவி
அலைபாயும் புல்வெளி
அளப் பெரிய பாறைகள்
அழகூட்டும் பசுமைகள்

ஆதிகாலம் முதல்
அண்மைக் காலம் வரை
அன்போடு பல்லின மக்கள்
பரவசமாய் வாழ்கின்றனர்

விண்ணில் இருந்து
கங்கை மண்ணிற்கு
வருமாப்போல் அழகு தரும்
வீழும் நீர் வீழ்ச்சிகள்

பச்சை பசேலென
தளிர்த்து நிற்கும்
தேயிலைச் செடித்
தோட்டங்களும் உண்டு

புராதன மன்னர்களின்
புகழினைக் கூறும்
தலைசிறந்த வரலாற்றுச்
சிற்பங்கள் கலைகள்

சுற்றிவர சூழ்ந்திருக்கும்
கடலன்னையின் மடி தனிலே
நித்திலம் என வீற்றிருக்கும்
இன்பச் சிறு நாடு என் நாடு

**அறிமுகப் புதுமுகத்தில் அறிமுகமாக விரும்புவோர் தங்களது ஆக்கங்களுடன் அண்மையில் எடுத்த புகைப்படமொன்றை தபால்மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கலாம்**

# இம்மாதப் பிரபலம்
# கவிஞர்.நீலாபாலன்



14.04.1948 இல் பிறந்த நல்லதம்பி பூபாலரத்தினம் எனும் இயற் பெயரையுடையவரும் கல்முனைப் பூபால், நீலாபாலன், பாலா, எரிபீட்டி, கவிஞானசேகரி, கல்முனைக் கவிராயர் என விரியும் புனைபெயருடையவருமான இவர் கிழக் கிலங்கையின் கல்முனை பிரதேசத்தைச் சேர்ந்த வராமிருப்பினும், நீண்ட காலமாக வெலிமடை எனும் இடத்திலேயே வசித்துவருகின்றார்.

சுவாமி விபுலாநந்தர், புலவர்மணி. பெரியதம்பிப் பிள்ளை ஆகியோர் கல்வி கற்ற கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையே இவரையும் எமக்கு இனங்காட்டியது.

பாடசாலைக் காலத்தில் சிறந்த பேச்சாளராக இருந்த இவர் கல்லூரியில் 'தமிழோசை' என்ற கையெழுத்துப் பத்திரிகை ஆசிரியராகவும் முத்தமிழ் மன்றத் தலைவராகவும் இருந்துள்ளார்.

கவிஞராக மட்டுமல்லாது 15 நாடகங்களுக்கு மேல் எழுதி, இயக்கி, நடித்து மேடையேற்றியுள்ளார். அதில் நிழல்கள், சிந்தனைச் சிலை, திருப்புமுனை, மாமனார் பறந்தார் என்பன குறிப்பிடத்தக்கன.

கவிஞர்களான நீலாவணன், பாண்டியூரான் ஜீவா ஜீவரத்தினம், மருதூர்க் கொத்தன், போன்றவர்களோடு ஒன்றிப்பழகக் கூடிய வாய்ப்பும், கவிதை சம்பந்தமான நுணுக்கங்களையும் கற்றுக் கொள்ளக் கூடிய கிடைத்ததனால் என்னால் பண்பட முடிந்தது என அந் நாட்களை பசுமையாக நினைவு படுத்துகிறார் நீலாபாலன்.

மரபுக்கவிதையா புதுக்கவிதையா நீங்கள் எழுதுவது எனக் கேட்டபோது நீலாபாலன் எழுதுவது கவிதைகள் புன்முறுவலுடன் கூறுகிறார்.

**'பூபால் கவிதை புனைவான் அவன் கவிதை சாவாத பேறுடையதாம்'** என மறைந்த கவிஞர் நீலாவணன் சாற்றுறுதி செய்திருப்பதற்கு மேல் கவிஞரின் கவிதை பற்றி பிறிதொன்றும் கூற வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

இவரது எழுத்துப் போலவே இவரது கவிதைப் பொழிவும் சிறப்பாகவே இருக்கும். வானொலியில் இடம்பெற்ற 'பௌர்ணமி' கவியரங்கொன்றில் இவரது பொழிவில் லயித்துப் போன இலங்கை வானொலி தமிழ்ப் பகுதிப் பொறுப்பாளர் **திரு.வி.என்.மதியழகன் அவர்கள் 1990 இல் வானொலியில் கவிதை சம்பந்தமான ஒரு நிகழ்ச்சியை நடத்தும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்க நீலாபாலனால் வானொலியில் ஆரம்பிக்கப்பட்டதே 'கவிதைக் கலசம்'**

இது வரை 75 கவியரங்குகளில் பங்கேற்றுள்ள இவர் வானொலியில் மட்டும் 12 கவியரங்குகளைத் தரைமைதாங்கியிருக்கின்றார்.

அண்மையில் 'இலந்தைப்பழத்துச் சிறுபுழுக்கள்' கவிதைத் தொகுதியூடு மக்கள் மனதை வென்ற இவரது இலக்கிய சேவையைக் கருத்திற் கொண்டு பின்வரும் அமைப்புக்கள் விருதுகளையும் கௌரவங்களையும் வழங்கியுள்ளன.

1972– 'பாவரவு' (இளம் எழுத்தாளர் மன்றம்)
1977– 'கவிதை' வித்தகன் (வெலிமடை இலக்கிய வட்டம்)
1991– 'கவிமணி' (ஊவா மாகாண சாகித்திய விழா)
1993– 'தமிழ் மணி' (நோர்வூட் இலக்கிய விழா)
1996– 'கவி மாமணி' (பண்டாரவளை கவிதை பெருவிழா)
2003– 'கவிதைப்பரிதி' (ஊவா சாகித்திய விழா)
2005– கலாபூசணம் (இலங்கை அரசு)

எனினும் தன் படைப்புகளே தன்னை இனங்காட்டவேண்டும் என்பதைத் தனது கொள்கையாக வைத்திருக்கும் இவர் தான் எழுதியதில் தனக்குப் பிடித்த கவிதையாக 'அக்கினிப் பாவலன்' எனம் கவிதையைத் தந்திருக்கிறார்.

# அக்கினிப் பாவலன்

பசியோடு உலவிடும் மனிதனின் துயரினைப்
பாடிடும் பாடகன் நான்
பாவையர் சதையினிற் காவியம் தேடிடும்
பாவலர் வைரியும் நான்
அசைகிற உலகினில் பணமொரு பசையெனும்
முதலைகட்(கு) அக்கினி நான்
ஆர்ப்பரித் தெழுகிற கீழ்த்திசைக் கடலென
பாத் தொடுக்கின்றவன் நான்.

பனிமலைக் குளிரினில் தினமுடல் பொடிபட
உடலுழைப் பீந்திடுவோர்
படுகிற துயரினைக் கவிதையில் பொழிகிற
பாக்கவி மேகமும் நான்
இனிஒரு விதிஇது எனஒரு புதுவிதி
எழுதிடும் பாவலன் நான்
ஏழைகள் உழைப்பினைச் சுரண்டிடும் மாடியை
எரித்திடும் தீப்பொறி நான்.

மெலியவர் உழைத்திட வலியவர் சுகித்திடும்
பிழைகளைப் பொசுக்கிடவே
பெருநெருப் பேந்திய ஒருதனிக் கவியென
பிறப்பெடுத்துள்ளவன் நான்
அழிபவர் துயரினில் நெலிபவர்,... வெயிலெனும்
அனலினிற் சரிபவர்க்கே...
அருமருந்தெனநறுந் திருமருந்தாய்கவி
ஆக்கிப் படைப்பவன் நான்.

காலமென் கன்னியின் தோல்–சதை எலும்பினைக்
கலையொடும் படம் பிடிப்பேன்.
கண்டவை என்னுளே கருத்தரித் தால்அதைக்
கவிதையாய்த் தொகுத்தளிப்பேன்.
ஏழைகள் உழைப்பினை எடுத்தெடுத் துறிஞ்சிடும்
எத்தரைத் தொலைத்தழிப்பேன்
இதுஒரு தனிவிதி எனஒரு புதுவிதி
எழுதிநான் பாவிசைப்பேன்.

– நீலாபாலன்–

# மணற்றொட்டி

மாணவர்களுக்கான
ஒரு பயிலீ களம்

## யாரவள்?

அன்பான தெய்வமடா
அணைத்துக்கொள்- உன்
அன்பான கைகளால்
அறுத்து விடாதே- உன்
கூரிய நா என்னும் வாளினால்
உனது சொர்க்கம் இருக்குமிடம்
அவளின் பாதையடா
அவளை மதித்தால்
சொர்க்கம் உன் சொந்தமடா!
அவளை மிதித்தால்
நரகம் உன் சொந்தமடா!
யார் இவள் என்று சிந்திக்கிறாயா?
முட்டாள் மானிடா- அது
உன் அன்னையடா!


**ஆ.கார்த்திகா**
**2010 ஆம் பிரிவு**
**உயர்தரம்**
**மட்-விபுலானந்தா வித்தியாலயம்**

## பாடசாலை நட்பு

பல திசையில் பிறந்தோம்
பாடசாலையில் இணைந்தோம்
நட்பு எனும் ஒரு சொல்லுக்கு-பல
கருத்துக்கள் கூறி -நட்பில்
உறுதியாய் நின்றோமே!

ஆனால் இன்று
காலத்தின் சதியால்
பிரிவு என்னும் சோகக் காற்றில்
பிரிந்து செல்கின்றோமே
இனி எப்போ? பல மூச்சு
ஒன்றாய் சேரும் -என
பல நாட்கள் காத்திருக்கிறேன்
இதுவா பாடசாலை நட்பு?

**ஏ.இன்பஜோஜ்**
**2011 ஆம் பிரிவு**
**உயர்தரம்**
**மட்-விபுலானந்தா வித்தியாலயம்**



## தாய்



சா.கஜேந்தினி
தரம் -9
மட்-விபுலானந்தா வித்தியாலயம்

பெண்மையின் பெருமையே!
தாய்மையின் தத்துவமே!
சேய் எந்தன் தேவைதனை
அறிந்தவள் அவளல்லவா?
இரத்தத்தைப் பாலாக்கி
தந்தவளும் அவளல்லவா?
பெற்றகடன் தீர்த்தவர்தான்
பாரினில் எவருமுண்டோ?

# கவிதைத் துளிகள்

## உண்மை

பொய்யான வாழ்விதிலும்
பொய்க்காத கருமங்கள்
புவியினிலே புரிந்தால்
பொய்யெல்லாம் உண்மை

## ஒழுக்கம்

ஒழுக்கத்தின் மூச்சிலே
உயிர் வாழும் யாவருக்கும்
ஒவ்வொரு மூச்சுமே
வெற்றியுள்ள மூச்சுதான்

**செல்லப்பா சுரேன்**
**நற்பட்டிமுனை**
**கல்முனை.**



## இதயம் துடிப்பதை நிறுத்திவிடுகிறது

தொலைவாக நீ இருந்தாலும்
தொலைந்து விடவில்லை
உன் நினைவுகள்
மனதார நேசிக்கும் உன்னை
ஒருநொடியேனும்
மறக்கும் முயற்சியில்
தோல்வியே கண்டேன்.
உன்னை நினைப்பதை
நிறுத்தி விட்டால்
என் இதயம்
துடிப்பதையே நிறுத்திவிடுகிறது

**நவப்ரஷாந்**
**நாவற்குடா**
**மட்டக்களப்பு**

**அன்பான வாசகர்களே,**

**"கவிஞன்" இதழின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் உங்களது ஆதரவை எதிர்பார்க்கின்றோம். நீங்களும் இன்றே சந்தாதாரராவதோடு உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.**

**-நன்றி-**




## "வார்த்தைகள் உரசும்போது வண்ணக் கவி உருவாகும்"

# ஏற்றிடுவோம் புதுமைதனை

புதுக்கவிதை புரியாத
புலவீர்கள்
புரியாமல் எழுதினரோ?
புதுக்கவிதை நடையினிலே
மரபுக் கவிதைபற்றி

மரபுக் கவியென்ன
மாறாத சட்டகமோ?
பாரதியின் கவிதை தனை
பலபேர்கள் ஏற்காத
காலமதும் உண்டப்போ
" கவிவலன்"
காணாது விட்டீரோ?

அப்பன் முப்பாட்டன்
அவன் பாட்டன் சொன்ன கதை
இப்போதும் கேட்கின்றோம்
இலக்கணத்தார் ஏற்காரோ?

நவீனம் பல வந்து
நாடெல்லாம் பரவுகையில்
புதுமையில் ஒன்றும் புதிதாக
இல்லையென்றீர்
புதுக்கவிதை என்பதெல்லாம்
மரபுத்தாய் பிரசவித்த
மழலையன்றி வேறில்லை
பழைய பானை தனில்
புதிய மொத்தைப் போல்
வந்த கவிவரிகள் வாழாது போகாது

எதுகை மோனை
இல்லை என்று சொல்லாதீர்
ஓர்வரியும் பொருள் கூறும்
உத்தியிது ஏற்றிடுங்கள்

ஏனென்றால்
பந்தி பல போட்டு
பாடலாய்ப் படித்திருந்தோம்
காலம் மறைந்து
இறுவெட்டு வடிவினிலே
ஏராளம் கதைகூறும்
காலம் இதுவன்றோ?

எட்டுமுழச் சாறி
இடுப்பில் கட்டியவள்
சுடிதாரில் வந்ததுவாய்
சொட்டு வரியில்
சுகம் கூறும் கவிதையிது

அழகுண்டு வடிவுண்டு
அர்த்தமும் பலவுண்டு
சுருங்குண்டு சுவையுண்டு
சொல்லில் பலவுண்டு

சேனையூர். இரத்தினசிங்கம்

*சிறந்த கவிதைகள்*

**மரபுக் கவிதையா? புதுக்கவிதையதா?**

*என்று உங்கள் கருத்துக்களை கவிதையாக்கி அனுப்புங்கள்*

# மாதமொரு கீதம்

**இம்மாதக்கீதம்**

## மட்-கல்லடி முகத்துவாரம் விபுலானந்த வித்தியாலயம்

**இயற்றியவர்**

மண்டூர் அசோகா

வாழ்கவே வாழ்க வாழ்கவே
விபுலானந்த வித்தியாலயம்
இது வாழிய வாழிய வாழியவென்றே
வாழ்த்தி வணங்கிடுவோம்.

முத்தமிழ் வித்தகராம் விபுலானந்தர்
நாமத்தைக் கொண்டிலங்கி
நற்றமிழ் கற்று நல்லோராக வாழ்ந்திட
நல்விதை விதைப்பதிது

அலைகடலும் அகழ் வாவியும்
அணிசெய்யும் அழகிய கல்லடியில்
நிலைபெறும் முகத்து வாரத்திலே
புகழ் நிலைத்திடும் வித்தியாலயமே

திருச்செந்தூர் முருகன் கோயில் கொண்ட
இடம் கல்லடி முகத்துவாரம்
இங்கு எழுச்சியோடு பலகலை கற்க
உதவிடும் விபுலானந்தா வளர்க

ஆண்டவன் அருளும் அறிஞர்கள் ஆசியும்
அனுதினம் பெற்றிடுவோம்-நம்மில்
கண்ணியம் கடமை கட்டுப் பாட்டுடன்
கற்று மகிழ்ந்திடுவோம்.

## மதிற்பிற்குரிய அதிபர்களே! ஆசிரியர்களே!

இப்பகுதியில் உங்கள் பாடசாலையின் கீதமும் இடம்பெற விரும்பினால். உங்கள் பாடசாலை கீதத்துடன் அதை இயற்றியவர் பற்றிய சிறு விபரத்தையும். உங்கள் பாடசாலையின் மாணவரிடமிருந்து பெற்ற ஆக்கங்களையும் அதிபரின் உறுதிப்படுத்தலுடன் எமக்கு அனுப்பிவையுங்கள். இதன்மூலம் கவிஞனின் கலாசாலைக்கீதங்கள் தொகுக்கும் மற்றும் ஆவணப்படுத்தும் செயற்றிட்டத்தில் நீங்களும் இணைந்து கொள்ளலாம்.

-நன்றி-

# மாணவர் மனதிலிருந்து

## நம்மை படைத்த இறைவன்

ஒரு வயிற்றுப் பிள்ளைகள் என
கூடி உறவாட வேண்டும் என்று
மாண்பு மிகு முதல்வன் அவன்
படைத்திட்டான் எம்மை அன்று

சாதிமதம் வேறில்லை சமத்துவமே உன் மூச்சு
சண்டை என்றும் தேவையில்லை என்று
பாங்காய் படைத்தவரும் இதமாக
கூறிச் சென்றார் தத்துவமாய்

படைத்தவனை மறந்திட்டான்
பலஇன மானிடனும் நினைக்க கூடவே இல்லை
சாதிஎன. மதங்கள்என பிரித்திடவே
தூர விலகினர் மானிடக் கூட்டம்

பார் முழுதாய் ஒளி வீசவேண்டிய மனித குலம்
ஒன்றோடு ஒன்று முட்டி மாண்டு போவதை பார்த்து
பாவம் அவன் என்ன செய்வான் - அவன்
வெறும் .....
படைக்க வந்தவன் தானே.

S.ஜோன்ஷன்
கலைப்பிரிவு - 2011
மட்-கல்லடி முகத்துவாரம் விபுலானந்த
வித்தியாலயம்.

## என் சோகம்

அலைகடலே அலைகடலே
அலைகளால் என் நெஞ்சினிலே
நீங்கா இடம் பிடித்தும் தான் என்ன?

மாலை வேளை தூறும் சாரல் தனிலே
பட்டம் நனைந்ததும் என் அருகில் - உன்
முன் வீழ்ந்தும் என் நெஞ்சம் தனிலே

உனக்கென்று ஓர் இடம் - எனக்காக
என் கூடலிலே பிடித்தால் என் நெஞ்சிலே
உண்மையென நான் நினைத்திருக்க

இல்லை இல்லை எதுவும் - பொய்
இல்லை யென நானும் நினைத்தேன்
இல்லை எதுவும் இல்லை என நீயும்
சொன்னாய்

காற்றுக்குள் ஒரு ஓடம் - பறந்ததடி
காற்றாடி ஒரு நொடிப் பொழுதில் சிரித்ததடி
காற்றும் இருந்ததடி ஆனால் காற்றாடி
இல்லையே

பறக்க முடியவில்லை - இப்பொழுது
பறக்க துடிக்குதடி என் நெஞ்சிலே
பறக்க நினைத்தாலும்
பறக்க இயலவில்லையடி

தி.டிசான் யோசுவராஜ்
கலைப்பிரிவு - 2012

# மௌனமாய் பேசுகிறோம்....



மணிக்கணக்காய் உன்னுடன்
மௌனமாய் பேசுகிறேன்..
ஜனனிக்கும் நம் வார்த்தைகளால்- காதல்
மரணித்துப் போயிடுமோ? என்று
பிரமித்துப் போனவளாய்...

கண்ணீரைத் தேக்கி வைக்கின்றேன்...
என் கல்லறைப் பூச்செடிகளும்
கண்ணீர் சிந்தினால்
தாங்க மாட்டாய் என்பதற்காக...

காலம் கடந்தாலும்
ஞாலம் உடைந்தாலும்
காலன் கவர்ந்தெந்தன்
கோலம் சிதைந்தாலும்
உனக்காகவே உயிராகுவேன்- மீண்டும்
மீண்டு வந்து நான் உனதாகுவேன்.

உன் மனதை
கல் என்று சொல்ல மாட்டேன்
என்னை முழுதாய்
கற்றுக் கொண்டவன் நீ!

உன் நினைவுகள்
பாலை வனமென்று சொல்லமாட்டேன்
எனக்காய் உன்னைப்
பகுத்துக்கொண்டவன் நீ!

உன் மௌனங்கள்
முடிவென்று சொல்லமாட்டேன்
என் மேன்மைக்காய் உன்னை
மெழுகாக்கியவன் நீ!

உன் ஓரப்பார்வைக்காய்
ஒரு கோடித் தவமிருந்தும் - உன்
மௌன வார்த்தைகளால்
பௌர்ணமியாகிறேன்-பின்
புண்பட்டுப் போனவளாய் நானும்
பண்பட்டுப் போகிறேன்.

உன் மௌனத்தின் காரணம்
மற்றவராய் இருந்தாலும்-என்
ஜனனத்தின் காரணம் நீயல்லவா?

உன் தயக்கத்தின் காரணம்
மற்றவராய் இருந்தாலும்- என்
ஏக்கத்தின் காரணம் நீயல்லவா?

உன்னைப் பிரிந்த நானென்பது
மண்ணைப் பிரிந்த மழையல்லவா?-ஐயன்
குறளைப் பிரிந்த தமிழல்லவா?

தூரிகை பிடித்து ஓவியம் படைக்கும்
ஓவியன் இழந்த விரலல்லவா?-நான்
யானைக் குளம்பதில் சிக்கிய நுளம்பல்லவா?

ஒரு சொட்டு வார்த்தைக்காய்
என் உயிர் கொட்டும்- பின்
மௌனத்தின் கானத்தால்-என்னை
கவி தட்டும்.

~ மதன் ~

# மானிட சமூகத்திலே.

பல கோடி மாந்தர்கள் மண்ணில் பிறக்கையில்
பண்பாளன் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றான்
நலமான வாழ்வுக்காய் நாய்படாப் பாடாக
நாளாந்தம் உழைக்கிறான் சமூக உயர்வுக்காய்

சேவையே உயிர் என வாழ்ந்தோர் சில பேர்
செல்லாக் காசுகளாய் மடிந்தோரே பலபேர்
தேவையை நிவர்த்தி செய்தாலே போதும்
தேவையற்ற செயல் நமக் கெதற்கென்று

பூமியில் வாழ்ந்தோர் புகழேதுமின்றி
புழுகித்தள்ளுவதை புராணமாய்க் கொண்டார்
சாமியே சமூகத்தின் சீரழிவு தன்னை
சமூக உணர்வுடன் சீர்படுத்த எண்ணி

உத்தமன் உயர்குணம் உண்மையில் படைத்தோன்
உருப்படியாக ஒரு சேவை செய்தால்
பித்தனாம் பார்தரும் பட்டங்கள் என்னே?
பிழைக்கத் தெரியாத பாவியாம் அண்ணே!

பொதுநலமற்றதோர் கலியுகமிதிலே
பொறாமை பொய் களவு மலிவாகப் பெறலாம்
மது வெறி மானிடர் மதிகெட்டுப் போய்விடின்
மாண்புறு வாழ்வைத் தேடுவதெங்கே?

கண்கெட்ட பின்னே நமஸ்காரமின்றி
காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளண்ணே!
மண்போற்றும் மனித வாழ்வோர் பிறவி
மனமாற்றம் வேண்டும் மானிட சமூகத்திலே...

-கதிரவன்-

கவி ஏன்

# சீ...... தனம் தேவையில்லை

ஆச்சி அடுப்படியில்
கறி பொங்குதென்று சொல்லி
ஆணத்தை அகப்பையால
ஆத்தி இறைக்கி வைக்க
அடுத்த வீட்டு அரசப்பா
அவசரமாய் ஓடிவந்து
"அலக்கா மனுசி வாவங்கா
கெதியா"என்றதுமே
நேரம் கிடக்கேடா இப்பென்ன
துடிக்கிறாய் நீ
என்றபடி முகம் கழுவ
கிணற்றடிக்குச் சென்றிட்டாள்
பஸ் சத்தம் கேட்குதுகா
"நான் போறன் சுறுக்கா வா"
பதிலுக்கு காத்திராமல்
அரசப்பா நடக்கின்றான்

கொவ்வைப் பழ நிறத்தில்
கொடிபோல பெண்ணைப் பெத்து
பட்டணத்துப் பள்ளியிலே
பெரும்படிப்புப் படிப்பிச்சு- இண்டைக்கு
உத்தியோகம் பார்க்கின்ற
பிள்ளைக்கொரு வரன் தேடி
சீதனக் கொடுமையால இவன் பாவி
நாயாக அலையிறானே...
கண்ணுள்ள ஆண்டவனே- உன்னைக்
கையெடுத்துக் கும்புடுறன்
பத்தோட பதினொண்டா
இதையுந் தள்ள நினையாதப்பா
மனதுக்குள் துதித்தபடி
நீண்டபெரு மூச்சோடு
வீட்டுக்குள்ளே நுழைந்தாள்
புதுமுகங்கள் மூன்றுடனே.
அரசப்பா குடும்பத்தார்
ஆச்சியை வரவேற்றனர்


வாயெல்லாம் பல்லாக
உள்ளே நுழைந்த ஆச்சி
பூ பிஞ்சு காயாக
புன்னகைக்கும் கதை பேசி
வயிறு குலுங்கிடவே
வந்தவரைச் சிரிக்க வைத்து
பெண்ணின் பெருமைகளை
வாயாரப் புகழ்ந்துரைத்து
பலதோடு பத்தையுமே
பக்குவமாய் பேசிய பின்
பெற்றவர்க்கு மத்தியிலே
மாப்பிள்ளை தனைப்பார்த்து
பெண்ணை மட்டும் பிடிச்சதெண்டு
ஒப்புக்குச் சொல்லாம
சீதனத் தகராறையும்
பேசித் தீர்த்திடுவம்
என்ன தம்பி சொல்லுறீங்க
என்றுரைத்தாள் நாசூக்காய்
காட்டிலையும் நாட்டிலையும்
சீதை நடந்தது போல்
காலமெல்லாம் என்னோட-உங்க
பெண் நடந்தா போதுமென்றார்

மாப்பிள்ளையின் பேச்சு
மனதைக் கலக்கிடவே
என்னதம்பி சொல்லுறீங்க
எனக்கொண்டும் விளங்கல்ல
என்று சொல்லி மாப்பிள்ளையை
உற்றுப் பார்த்துக் கேட்டாள் ஆச்சி

தனத்தைச் சீ என்றேன்
குணத்தைத் தா என்றேன்
மாப்பிள்ளை விளக்கம் கேட்டு
மனப்பாரம் குறைந்திடவே
மனையிலுள்ளோர் பூரித்தார்.

**திருமதி.எஸ்.சீ.சற்குணராஜன்(ஆசிரியை)**
**இல: 36/21, எல்லை வீதி வடக்கு**
**மட்டக்களப்பு.**

# அட்டைப்படக் கவிதை



க.சுபாஸ்
ஊறணி
மட்டக்களப்பு.

நெறிமாறும் மானிடர்
வலையினில் சிறைபட்ட பணமோ?
அறு நீதி தவறாதோர்
அநீதிக்குப் பொறிவைத்தல் தகுமோ?

சத்திதாஸ்
புதுக்குடியிருப்பு

பொறிவைத்துப் பணம்பறிப்பார் அறியார் அதுவே
குறிவைக்கும் நமக்கும் பிறகென்று

சுகுமார்
சின்னகரைச்சல்
பேசாலை
மன்னார்

சிக்கியதோ இது
சிக்க வைக்கவோ?
தப்பிடுமோ -இல்லை
தலை விதியோ?

கே.டனுசன்
இல 10
குடியிருப்புமுனை

எலிப்பொறியாயினும்
வழிப்பறி ஒன்றே
தப்புவதுந்தன்
தலைவிதியல்ல
மதிவழி தெரிந்து கொள்

# அகத்தில் அமர்ந்தவை

எனது அகத்தில் அமர்தவைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இவை அனைத்தும் இணையத்தில் உலாவிக்கொண்டிருக்கையில் எனது கண்ணில் பட்டவை. இன்னும் எத்தனை எத்தனையோ அற்புதப் படைப்புக்களிடையே நாம் வலம்வந்து கொண்டிருந்தாலும் அவற்றை படித்து விட்டு மறந்து விடுகின்றோம். அவ்வாறல்லாமல் ஒரு தேடலில் களமாக, இலக்கியத் தீனியாக நீங்கள் இணயத்தில் இரசித்தவற்றையும் மற்றவருடன் பகிர்ந்து கொள்ள அகத்தில் அமர்ந்தவை பகுதியையும் பயன்படுத்துங்கள் அவை பெறப்பட்ட இணையத்தளத்தினையும் குறிப்பிட மறவாதீர்கள்!

நன்றி

என்றென்றும் அன்புடன்
மதன்

இலக்கியக் காதல்

குறள்

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்.

காதலி தீ. ஆனால் அந்தத் தீ எப்படியானது என்றால்,
அருகில் போனால் குளிருகிறதாம்..நீங்கினால் சுடுகிறதாம். அற்புதக் கற்பனை.

கம்பர்....

நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிது நாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்து விட்டார்க்கு உயிர் கொடாது,
அங்குப்போகேன் தார்க்கோல மேனி மைந்த என் துயர் தவிர்த்தி ஆகின்
கார்க்கோல மேனியானைக் கூடுதி கடிதின் ஏகி.

நீர்குமிழி போன்ற குறைந்த காலத்தை கொண்ட வாழ்விற்காக, நீண்ட நாட்களாக வளர்த்து, நம்பி போருக்கு அனுப்பி வைத்த அண்ணனுக்காக உயிரைக்கொடுப்பேனே தவிர அங்கு வரமாட்டேன்.. ஆனால் நீயாவது அந்த மழையழகு மேனியான ராமனிடம் சென்று நல்லபடி சேர்ந்திடு..
என விபீடனிடம் கும்பகர்ணன் சொன்னான்.

என இப்படியான இன்னும் பல இலக்கிய விடயங்கள் அடங்கிய இணையத்தளமாக உலவிக்கொண்டிருக்கிறது http://nenjodukilathal.blogspot.com இதனை இயக்கிக்கொண்டிருப்பவர்

# மேசைக் கிறுக்கள்



நிழல் கூட
வெளிச்சமுள்ளவரைதான்
துணைக்கு வரும்
உண்மையான அன்பு
உயிருள்ளவரை
துணைக்கு வரும்.

நீ கேடி என்று தெரிந்தும்
உன்னைப் 'போடி' என்று
சொல்ல முடியவில்லை!
உன்னை நாடி வந்த பொழுதும்
பாடி வதைப்பதேனோ?


அன்னை தந்தையாய்
உனைப் பார்ப்பேன்
அன்பு தந்து உன்னில்
எனைப் பார்ப்பேன்.

நிழலாக நீயும்
நிஜமான நினைவுகளும்
நிலைக்குமடி!
உலகில் மற்றதெல்லாம்
தன் நிலைமாறி பிழைக்குமடி!

கடலோரக் கவிதையல்ல
நம் காதல்
கல்வெட்டின்
காவியம்

# நிறைமகள்

-வேதமூர்த்தி-



தாய் சித்திராபதியின் சீத்துவத்தால்
மன்னன் திருமாவளவன் வளைய
விளைந்தது ஒப்புதல்
அரங்கேற்ற ஆரவாரம்
ஆகாயம் பறந்தது.
பாவை நடம் காண
பட்டியும் தொட்டியும்
பணக்காரக் கூட்டமும்
படையெடுத்தது பட்டிணத்திற்கு.

அளவு கணக்கெடுத்து
ஆசாரமாய் அமைந்த
அலங்கார மேடையில்
பக்கத்து வாத்தியங்கள்
பாவையின் நரம்புக்கு முறுக்கேற்ற
பதமாக எழுந்தது.
விழிகளின் கூட்டம் வீதியெங்கும்
விம்மிப் புடைத்தது
பொங்கி வழிந்தது வெள்ளமாக.

மாதவி அங்கே, மருங்கசைய ஆடவர்
மனங்கிறங்க
மன்னன் மந்திரி மேற்பார்வையில்
வீதியை விழுத்தினாள்
மேடையை நிமிர்த்தினாள்.

இசைகள் இதமாக இசைந்தோட
பெண்கள் வலமாக அசைந்தாட –அவள்
கண்கள் கறங்காகச் சுழன்றோட
அங்கம் ஆங்காங்கே குழைந்தாட
அவள் வளைந்தாட...

நிறைவாள்....

# வாசகரிடமிருந்து கவிஞனுக்கு

*கவிஞனே...! நீ வாழி...!*

*அன்புடையீர்*

*கவிஞன்-8 இதழில் என்னைப் பற்றி பிரபலப் படுத்தியதுடன். எனது கவிதையும் பிரசுரித்து பெருமைப்படுத்தியிருந்தீர்கள் மிக்க நன்றிகள்*

*உங்களது கவிதை இதழ்கள் சில தம்பிலுவில் தயா, தம்பிலுவில் ஜெகா ஆகியோர் மூலமாக அறியவும் படித்துச் சுவைக்கவும் கிடைத்தன.*

*கடந்த 1973 காலப்பகுதியில் கல்முனைப் பிரதேச எழுத்தாளர்கள் இணைந்து "கவிவேந்தன் நீலவணன்" அவர்களது வழிகாட்டலுடன் "கவிஞன்" எனும் ஒரு தனிக் கவிதைச் சஞ்சிகையை மிகவும் கனதியாகவும். அழகுடனும் வெளியிட்டிருந்தார்கள். ஆனால் மூன்று இதழ்களுடன் அது நின்றுவிட்டதென நினைக்கின்றேன்.உங்களது வெளியீட்டினைப் பார்க்கும் போது அந்த நினைவுகளை மீட்டிக் கொண்டேன்.*


*தொடர்ந்து ஆக்கமும் ஊக்கமும் தர முன்னிற்பேன்*

*நன்றியுடன்*
*முல்லை வீரக்குட்டி*
*3ம் குறுக்கு. ஜேபி வீதி.*
*தம்பிலுவில்-01*
*32415*

*கவிஞனே!*
*உன் கவிதைக்கு*
*இந்த*
*உலகம் ஒருநாள்*
*தலையாட்டும்*

*செல்வி.ஆறுமுகம் சாகின்யா*
*இல:07, ஞானசூரியம் சதுக்கம்*
*மட்டக்களப்பு.*

## கவிதை நூல் அறிமுகம்



**நூல்** : **இரண்டு கார்த்திகைப் பறவைகள்**
**ஆசிரியர்** : **எஸ்.புஸ்பானந்தன்**
**வெளியீட்டு** : **கலை இலக்கிய அவை . மண்டூர்.**
**முகவரி** : **இல-20.தோமஸ் லேன். மட்டக்களப்பு**
**முதற் பதிப்பு** : 2007
**விலை** : ரூ.150.00

# சிவா மல்டி கொம்லக்ஸ்

பிரதான வீதி.புதுக்குடியிருப்பு. (பாடசாலைக்கு அருகாமையில்)

பாடசாலை உபகரணங்கள் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான புதிய வெளியீடுகள் . போட்டோப் பிரதி லெமினேற்றிங் கொம்பியூட்டர் ப்பிரின்டிங் ஸ்கேனிங் Internet & E-Mail சேவை விளையாட்டுப் பொருட்கள்,பரிசுப்பொருட்கள். வாழ்த்தட்டைகள். புக் பைண்டிங்

**VCD, DVD Writing**

மற்றும் **Mobitel ,Dialog,Airtel Reload**

**Dialog, Mobitel, Suntel, SLT net, SLT Passport** போன்ற அனைத்து முற்கொடுப்பனவு அட்டைகளும் இங்கே பெற்றுக்கொள்ள முடியும்

தொடர்புகளுக்கு : 0770452861 , 0653641247

E- Mail : psnraj@yahoo.com




நகரும் நாட்களின் தொடரும் விடிவிற்காய் உங்கள் மனப்பதிவுகளை கவிஞன் எனும் காலக்கண்ணாடியில் தரவேற்றம் செய்து, உங்கள் ஆக்கங்களையும் காலத்தின் தேவையையும் கலையினூடு பகிர்ந்து கொள்ளுங்கள்

உங்கள் ஆக்கங்களை கீழுள்ள முகவரிக்கு அனுப்பி காலக்கண்ணாடியின் கோலப்புத்தகத்தில் நீங்களும் புள்ளி வையுங்கள்!!!

அனைத்துத் தொடர்புகளுக்கும்:


"கவிஞன்"<br>
கூட்டுறவுக் கடை வீதி.<br>
புதுக்குடியிருப்பு - 5 (கீ.மா).<br>
மட்டக்களப்பு.<br>
இலங்கை.<br>
0773620328


அனைத்து ஆக்கங்களுக்கும் படைப்பாளிகளே பொறுப்புடையவர்